MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

மேன்மதி கோவை தமிழ் மன்றம்
சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
MENMATHI KOVAI TAMIL MANDRAM
INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS

சித்தர் பாடல்களில் இலக்கியமும் சமூகத் தொண்டும்

மு. தமிழரசி
பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ்த்துறை
ஆர்.வி.எஸ். கலை அறிவியல் கல்லூரி
சூலூர், கோவை - 641 402.

நெறியாளர்
முனைவர் வா. சித்ரா
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை
ஆர்.வி.எஸ். கலை அறிவியல் கல்லூரி,
சூலூர் , கோவை - 641 402.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

"Literary Excellence and Social Service in Siddhar Songs"

M. Tamilarasi

Part-Time Ph.D. Research Scholar
Department of Tamil
R.V.S. College of Arts and Science
Sulur, Coimbatore – 641 402, Tamil Nadu, India

GUIDE

Dr. V. CHITRA

Associate Professor
Department of Tamil
R.V.S College of Arts and Science
Sulur, Coimbatore – 641 402, Tamil Nadu, India

Abstract

This article examines how literary excellence and social service are integrated and expressed in the Siddha poems. Through their poems, the Siddhas have conveyed spiritual truth, life philosophy, humanism, and social reform in simple language and folk song forms that are understandable even to the common people. Through literary devices such as esoteric terms, similes and metaphors, and double meanings, the Siddha poems express profound ideas such as the impermanence of human life, moral principles, divine consciousness, and the greatness of human birth. Furthermore, these poems criticize superstitions, pseudo-religious practices, and social injustices, emphasizing the social goal of establishing equality and human dignity. Therefore, this study reveals that Siddha poems stand as a form of people's literature in Tamil literature and as a treasure trove of thought that simultaneously fosters social awareness and spiritual understanding.

Keywords - Folk literature, narrative style, method of depicting life

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

ஆய்வுச் சுருக்கம்

இக்கட்டுரை சித்தர் பாடல்களில் காணப்படும் இலக்கியச் சிறப்பும் சமூகத் தொண்டும் எவ்வாறு ஒருங்கிணைந்து வெளிப்படுகின்றன என்பதை ஆராய்கிறது. சித்தர்கள் தம் பாடல்களின் மூலம் ஆன்மிக உண்மை, வாழ்வியல் தத்துவம், மனிதநேயம், சமூகச் சீர்திருத்தம் ஆகியவற்றை பாமர மக்களுக்கும் புரியும் எளிய மொழி மற்றும் நாட்டுப்புறப் பாடல் வடிவங்களில் எடுத்துரைத்துள்ளனர். மறைபொருள் கொண்ட சொற்கள், உவமை-உருவகங்கள், இரட்டைப் பொருள் அமைப்பு போன்ற இலக்கிய நயங்களின் வழி, மனித வாழ்வின் நிலையாமை, ஒழுக்க நெறி, இறையுணர்வு, மனிதப் பிறப்பின் மகத்துவம் ஆகிய ஆழ்ந்த கருத்துகளைச் சித்தர் பாடல்கள் வெளிப்படுத்துகின்றன. மேலும், மூடநம்பிக்கைகள், போலி சமயச் செயல்கள், சமூக அநீதிகள் ஆகியவற்றை விமர்சித்து, சமத்துவமும் மனித மதிப்பும் நிலைபெற வேண்டும் என்ற சமூகக் குறிக்கோளையும் இப்பாடல்கள் வலியுறுத்துகின்றன. ஆகவே, சித்தர் பாடல்கள் தமிழிலக்கியத்தில் மக்கள் இலக்கியமாகவும், சமூக விழிப்புணர்வையும் ஆன்மிகப் புரிதலையும் ஒருசேர வளர்க்கும் சிந்தனைக் கருவூலமாகவும் திகழ்கின்றன என்பதை இவ்வாய்வு வெளிப்படுத்துகிறது.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

திறவுச்சொல் - மக்கள் இலக்கியம், சொல்லும் முறைமை, வாழ்க்கையை எடுத்துச் சொல்லும் முறைமை.

முன்னுரை

உலகைப் பற்றிய சித்தர் சிந்தனைகள் வான்தொடும் வளமான சிந்தனைகளாக திகழ்கின்றன. உயிரைப் பற்றிய சிந்தனைகள் உய்த்துணர முடியாத ஆழங்கொண்டவையாக அமைந்துள்ளன. இவை மனித சமுதாயத்திற்கு ஏதேனும் ஒரு வகையில் பயன்படும் வண்ணம் அமைந்துள்ளன. உலகில் இயங்கும் மனிதர்களைச் சிந்திக்க வைக்கும் சிந்தனையாளர்களாய் சித்தர்கள் இருந்துள்ளனர். அவர்கள் பாடிய பாடல்கள் அனைத்தும் பாமர மக்களின் பகுத்தறியும் பாங்கினையும், வாழ்வியலையும் வகுத்துக் காட்டுவனவாயுள்ளன. உலகத்து மயக்கத்தில் மயங்கி நிற்கும் மக்களை அம்மயக்கத்திலிருந்து விடுவித்து, ஒழுக்க நெறியிலும், உண்மை நெறியிலும் ஒழுக அவரவர் தகுதிக்குத் தக்க முறையில் எளிய நடை, பொருள் கருத்தாழம் உடையனவாக அமைத்துள்ளனர். இவற்றை ஆராய்வதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

மக்களின் வாழ்க்கைக்குப் பயன்படும் முறையில் வாழ்க்கையின் உண்மையோடு இயைந்ததாக இயற்றப்பட்டுக் காலம் கடந்து வாழும் விழுமிய நூல் 'இலக்கியம்" எனலாம். இவ்விலக்கியம் உயர்ந்த நோக்கைக் கொண்டதாக அமைந்திருக்கும்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

தமிழில் இருக்கும் இலக்கியங்களைக் காலமுறைப்படி கணித்தால் ஒவ்வொரு காலத்திலும் ஒவ்வொரு வகையான இலக்கியங்கள் தோன்றின என்பது விளங்கும். ஒவ்வொரு பாடலைப் படித்துப்பர்த்துப் புரிந்து கொள்ள முயற்சி செய்தாலும், “ஓடும் செம்பொன்னும்" ஒக்கவே நோக்கும் மனப்பக்குவம் உடையவர்களுக்கே விளங்கும்.

சித்தர் தம் பாடல்களில் மறைபொருள் வைத்துப் பாடியுள்ளனர். செவி வழியாக வந்த சித்தர் கருத்துகளை அன்னவர் உலகுக்குணர்த்தப் பாடல்களாகப் பாடி அவற்றைத் தொகுத்து வைத்தனர். சித்தர்கள் பாடியிருந்தாலும், அல்லது பின்வந்தோர் பாடியிருந்தாலும் அவர்தம் உண்மை நிலை பாடல்கள் வழி புலப்படுத்தப்படும். பழமையான மரபாக வந்த இலக்கிய வடிவத்தை விடுத்துப்பெரும்பாலும் எல்லா மக்களுக்கும் புரியும் வகையில் எளிமையான பாடல்களைச் சித்தர்கள் பாடியுள்ளனர்.

மக்கள் இலக்கியம்

மக்களுக்குத் தொண்டு செய்யவேண்டும் என்ற கொள்கையைக் கொண்டு அதற்குக் கருவியாக இலக்கியத்தைக் கையாண்டவர்கள் சித்தர்கள். இவர்கள் கூறவந்த அரிய கருத்துகளை இனிய எளிய முறையில் விளக்க வேண்டும் என்ற நோக்கம் கொண்டவர்கள். ஆதலின், வடிவம் முதலியனவற்றுக்காக முயற்சி எடுத்துக்கொள்ளவில்லை. புதிய கருத்துகளைத் தந்ததுபோலவே புதிய இலக்கிய வடிவம் தோன்றுவதற்கும் காரணமாக இருந்தனர் சித்தர்கள்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

எனவே, சித்தர் பாடல்களை 'மக்கள் இலக்கியம்" என்றும் கூறலாம்.

மக்கள் வாழ்வோடு பின்னியதாக, கவிஞன் தன் தனி வாழ்வை மறந்து பரந்த உலக வாழ்வை உணர்ந்து, என்றும் மக்களுக்கு இன்பம் தரும் வாழ்வை எண்ணிப் பாடுவது இலக்கியம். இவை மக்களுக்காகவே படைக்கப்பட்டன. காலம் கடந்து வாழ்வன உலக மக்கள் வாழ வழிகாட்டுவன. இலக்கியங்கள் ஒரு மனிதனின் வாழ்வைக் காட்டுவனவாக அமைந்துள்ளன. இவை சமய இலக்கியங்கள், இயற்கை பற்றிய இலக்கியங்கள், மொழி பற்றிய இலக்கியங்கள், சித்தர் இலக்கியங்கள் எனப் பலவாக அமைந்துள்ளன. சித்தர்களில் முதன்மையானவர் அகத்தியர். இவர் பெயரில் அகத்தியம் என்ற நூல் இருந்தது. அதில்,

"இலக்கியம் இன்றி இலக்கணம் இன்றே
எள்ளின் றாகில் எண்ணெயும் இன்றே
எள்ளினின் றெண்ணெய் எடுப்பது போல
இலக்கியத்தி னின் றெடுப்பது இலக்கணம்"[1]

என்று கூறப்பட்டுள்ளது.

சொல்லும் முறைமை

சித்தர்கள் மிக ஆழமான கருத்துகளைப் பாமரர்களும் எளிதில்

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

புரிந்துகொள்ளும் வகையில் எளிய தமிழில் சொல்லியிருக்கிறார்கள். இவர்களின் பாடல்களை இலக்கியச் சுவைக்காகவும், எண்ணங்களின் ஆழத்திற்காகவும் படிக்கலாம். ஆன்மிக அறிவைப் பெறுவதற்காகவும், வாழ்க்கையைப் புரிந்து கொள்வதற்காகவும் சித்தர்களின் பாடல்கள் பயன்படுகின்றன.

சித்தர்கள் இறைவனை உணர்த்தியவர்கள். தாம் உணர்ந்தவற்றை மற்றவர்களுக்கும் உணர்த்தினார்கள். பாடலைப் படிக்கும்போது மேலோட்டமாக ஒரு பொருளும், உள்ளார்ந்து வேறு ஒரு பொருளும் அமையப் பாடியுள்ளனர். சித்தர் பாடல்களைப் படிக்கும்போது அவற்றின் எளிமையும் மிடுக்கும் இளமைப் பொலிவோடு ஒளிவீசக் காணலாம். பழமைக்குப் பழமையாக அமைந்தது சித்தர் இலக்கியம். முன்னைப் பழமைக்குப் பழமையாக விளங்குகிற இந்த ஒப்பற்ற சிறப்பு, சித்தர் இலக்கியத்தின் உயர்தனிப் பண்பாகும்.

சித்தர்கள் மக்களின் மொழிநடையைக் கொண்டு பாமர மக்களுக்கும் புரியும் வகையில் மொழியும், நடையும் எளிமையானவையாக அமைத்துப் பாடினர். யாப்பு முறையில் புதுமையைப் புகுத்தியதைப் போலவே சொல்லாட்சியிலும் புதுமைமைப் புகுத்தியவர்கள் சித்தர்கள். அதாவது மக்கள் வழக்கில் இருந்த பாட்டு நடையைப் பயன்படுத்தியது போலவே பேச்சு வழக்குச் சொற்களையும் பயன்படுத்தினர். எனினும், அவற்றில் பல ஏமாற்றும் எளிமை உடையன. சாதாரண நிலையில் உள்ளவர்களுக்கு பொருளும்,

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

ஆய்ந்து ஆராய்ந்து நோக்குபவர்களுக்கு ஒரு பொருளுமாகத் தோன்றும் வகையில் அமையும் சொற்களைக் "குழூஉக்குறிச் சொற்கள் அல்லது 'பரிபாஷை' என்று கூறுவர்.

பாடல்களைப் படிக்கும் புலவவர்களோ மற்றவர்களோ அவற்றின் உண்மைப் பொருளைக் கண்டறிய முடியாது. பரம்பரையான சித்தர் நூல் பயிற்சியுள்ளவர்கள் தாம் அவற்றின் உண்மைப் பொருளைக் கண்டறிய முடியும். அக்குழூஉக்குறிச் சொற்களின் உண்மைப் பொருளைக் கூற வல்லோர் பலர் தமிழகத்தில் இன்றும் இருக்கின்றனர்.

விழுமிய கருத்துகளைக் கூறுவனவாக இருப்பினும் சித்தர் இலக்கியங்களில் மற்ற இலக்கியங்களைப் போலவே சொல், பொருள், நயம் மிகுதியாகக் காணப்படுகின்றன. சான்றாகப் பின்வரும் சிவவாக்கியர் பாடலைக் கருதலாம்.

"அஞ்செழுத்திலே பிறந்து அஞ்செழுத்திலே வளர்ந்து
அஞ்செழுத்தை ஓதுகின்ற பஞ்சபூத பாவிகாள்
அஞ்செழுத்தில் ஓர் எழுத்து அறிந்து கூற வல்லீரேல்
அஞ்சல் அஞ்சல் என்று நாதன் அம்பலத்தில்
ஆடுமே"[2]

இப்பாடலில் வரும் ஐந்து என்னும்சொல் பஞ்சாட்சரத்தைக் குறிக்கும். இவ்வஞ்செழுத்திலே தான் பஞ்சபூதத்தின் கூட்டாகிய

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

இவ்வுலகம் தோன்றியது. இவ்வைந்தெழுத்துக்கும் அடிப்படையானது ஓர் எழுத்தே. அந்த ஓர் எழுத்தை அறிந்து கொண்டால் எதற்கும் அஞ்ச வேண்டிய நிலை ஏற்படாது என்பதே இப்பாடலின் பொருள்.

வாழ்க்கையை எடுத்துச் சொல்லும் முறைமை

நிலையாமையை மட்டும் சித்தர்கள் சுட்டிக் காட்டவில்லை. வாழ்க்கையில் நிலைக்கின்ற வழி எது என்பதையும் தெளிவுபடக் கூறியுள்ளனர். ஆழமான கருத்துகளை அழகான சொற்கள் கொண்டு ஓசையோடு அமைந்த நடையில் பாடியுள்ளனர். பளிங்கு நீர் போன்ற தெளிவான ஓட்டம், படித்தவரும் பாமரரும் புரிந்து கொள்ளும்படியான விளக்கங்கள் சித்தர் இலக்கியத்தின் திறமாக அமைந்துள்ளன. சான்றாகப் பட்டினத்தாரின் பாடல்களைக் கூறலாம்.

வாழ்வியல் உண்மை, புரட்சிக் கருத்துகள், தத்துவக் கருத்துகள் வெளிப்படையாக உணர்த்துகின்ற நிலை போன்றவற்றை சித்தர் பாடல்களில் காணமுடிகின்றது. பஞ்சபூதங்களின் சேர்க்கையில் இயங்கும் மனித உடல் அவற்றின் பிரிவால் சோர்ந்துவிடும் இயல்புடையது. இச்சோர்வினை “மரணம்” என்னும் பெயரால் குறிப்பிடுவர். பண்டு முதல் இன்று வரை மனித வாழ்வியலை ஆராயின் இவ்வுடல் அழியும் இயல்புடையதே. இப்பொய்யான உடம்பை மெய் என்னும் சொல்லால் குறிக்கும் மரபும் உண்டு.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

ஆனால். சித்தர்கள் உண்மையில் இவ்வுடம்பின் இயல்பு அழிவதன்று என்று முடிவாகக் கூறுகிறனர். இதனை **இராமலிங்க அடிகளார் "மரணமிலாப் பெருவாழ்வு"** குறிப்பிடுகின்றார்.

வாழும் நெறிமுறை அறியாது வெறும் ஆசைகளாலும், வெற்றுப் பூசைகளாலும் மயங்கி மனிதப் பிறப்பின் மகத்துவம் அறியாது உழலும் பூக்களுக்கு இரசவாதம், மருத்துவம், தியானநெறி காட்டுவதுடன் தம் அருளிச் செயல்களால் இறையுணர்வு கொள்ளச் செய்து 'மனிதனும் தெய்வமாகலாம்" உணர்த்தும் திறன் வாய்ந்தவர்களாக சித்தர்கள் திகழ்கின்றனர்.

பட்டினத்தார் கூறும்போது, சிற்றின்பம் விடுத்துப் பேரின்பத்தை அடைய வேண்டுமென்பதை வலியுறுத்துகின்றார். தங்கத்தை நெருப்பிலிட்டு உருக்குவதுபோல் பட்டினத்தாரை இறைவன் துன்பத்தீயால் உருக்கி, உருக்கிச் செம்பொன் ஞானியாக்கினான். அவர் தாம் பெற்ற இன்பத்தை உலக மக்களும் அனுபவிக்க வேண்டும் என்று எண்ணியவர். இதனை,

"வாசிப் பழக்கம் அறியவேணு மற்று
மண்டல வீடுகள் கட்ட வேணும்
நாசி வழிக்கொண்டு யோகமும் வாசியும்
நாட்டத்தைப் பாரடி வாலைப் பெண்ணே"[3]

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

என்று கொங்கணர் மிக எளிய முறையில் யோகமுறைகளைக் கும்மிப் பாடல் மூலமாக வெளிப்படுத்துகின்றார்.

சித்தர்களுள் பெரும்பான்மையினர் கல்வி, கேள்விகளுள் சிறந்திருந்தும், செல்வர்களாக வாழ்ந்திருந்தும், நிலையாமையை அறிந்த அளவில் துறவு பூண்டு சித்தர்களாகியுள்ளனர். எனவேதான், அவர்கள் பாடிய பாடல்கள் வெண்பா, விருத்தம் போன்ற இலக்கண அமைதி பெற்ற செம்பொருள் நல்கும் செய்யுள்களாகவும் அமைந்துள்ளன. இதனை பட்டினத்தாரின்.

“மாதா உடல் சலித்தான் வல்வினையேன்

கால்சலித்தேன்.

வேதாவும் கைசலித்து விட்டாளே - நாதா

இருப்பையூர் வாழ்சிவனே! இன்னம் ஓ ரன்னை

கருப்பையூர் வாராமற் கா!"[4]

பாடலைக் சான்றாகக் காட்டலாம்.

கருத்துகளை நல்ல எடுத்துக்காட்டுகள் காட்டி விளக்குகின்ற முறையும் சித்தர்களுக்குக் கைவந்த கலையாக இருந்தது. சித்தர்கள் காட்டும் உலைமகள் அனைத்தும் மக்கள் வாழ்வில் நிகழும் நிகழ்ச்சிகளேயாகும். சித்தர் இலக்கியத்தின் தனிப்பெரும் பண்பும் இதுவேயாகும். சித்தர் பாடல்களில் எண்ணற்ற உவமைகள் காணப்படுகின்றன.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

விளக்கத்திற்குப் பயன்படும் உவமை இலக்கியச் சுவைக்கு மெருகூட்டுவதாக அமையும் சொல் மாலைகள், அழகிய பொருள் மாலைகளாகவும் அணிநயம் பெற்றுக் கற்போரை மகிழ்விக்குமாறு சித்தர் பாடல்கள் அமைந்துள்ளன.

சான்றாக.

“சூரியனைக் கண்ட பனிபோல"[5]

“புளியம் பழமும் ஓடும் போல”[6]

“இலவு காத்த கிளி போல"[7]

“நந்தவனத்தில் ஓர் ஆண்டி”[8]

என்பனவாகும். இப்பாடல்களில் அழகான உவமைகளும், நுட்பமான கருத்தும் ஒளிர்கின்றன.

வாழ்க்கைத் தத்துவத்தை இதைவிட எளிமையாக யாரும் கூறிவிட முடியாது. உயிர் எந்தப் பற்றும் இல்லாததால் 'ஆண்டி” ஆகிறது. கேட்பதைக் கொடுக்கும் இறைவன் 'குயவன்” ஆகின்றார். உலகில் நல்ல காரியங்களைச் செய்யப் படைக்கப்பட்ட 'உடல்” தோண்டியாகிறது உலகமோ ஒரு நந்தவனம் பத்து மாதம் தாயின் கருப்பையில் சிறிது சிறிதாகக்குழந்தை உருவாகி வளர்வதைக் குயவன் மண்பாண்டத்தை உருவாக்குகின்ற முயலுக்கு ஒப்பாக அமைக்கப்படும் பாங்கை அறியலாம்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

பாம்பாட்டிச் சித்தரின் பாடலில் காணப்படும் உவமை இரண்டு பாடல்களில் விளக்கப்படுகிறது. நாற்றமெடுக்கும் மீனைக் கழுவினாலும் அதன் நாற்றம் போவதில்லை, நல்ல தூய்மையான நீரில் பலமுறை கழுவினாலும் பேவதில்லை. அதைப் போலவே பிழையே செய்யும் இயல்புடையவர்கள் செய்த பாவத்தைக் கழுவுவதற்கு கோயில் கோயிலாகச் சென்றாலும் குளங்கள் பலவற்றில் மூழ்கினாலும் அவர்கள் செய்த பிழையின் தன்மை நீங்காது. மீனின் நாற்றம் எவ்வாறு அதனோடு இருக்குமோ அது போலவே பிழையின் பயனும் தொடர்ந்து வரும் என்பதை.

“நாறுமீனைப் பலதரம் நல்ல தண்ணீரால்

நாளும் கழுவினாலும் அதன் நாற்றம் போமோ

கூறும் உடல் பல நதியாடிக் கொண்டதால்

கொண்ட மலம் நீங்காதென்று ஆடும்பாம்பே"[9]

எனும் பாடல் அறிவுறுத்துகிறது. விதை கண்ணுக்குத் தெரிகின்றது. ஆனால் அதனுள் மறைந்திருக்கும் செடியோ, கொடியோ, மரமோ கண்ணுக்குப் புலனாவதில்லை. பூவைப் பார்க்கிறோம். அதனுள் மறைந்துள்ள மனத்தைப் பார்க்க முடிவதில்லை. மயில் முட்டையைப் பார்க்கின்றோம். ஆனால் அதில் தோன்றுகின்ற பல வண்ணங்கள் மறைந்துள்ள விந்தையை அறிய முடிவதில்லை.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

எனவே நமது பொறிபுலன்களுக்கு எட்டாத காரணத்தால் இருக்கின்ற ஒன்றை

இல்லை என மறுத்துவிட முடியாது. தோன்றுகின்ற தூலப் பொருள்களில் சூக்குமமாக அவை மறைந்துள்ளன. இதனைத் திருமூலர்.

“தேனுக்குள் இன்பம் கருப்போ சிவப்போ

தேனுக்குள் இன்பம் கரந்தாற் போல

ஊனுக்குள் ஈசன்"[10]

என்று குறிப்பிடுகின்றார். எல்லா உயிர்களிலும் இறைவன் கலந்துள்ள தன்மையை இது வெளிப்படுத்துகிறது.

சித்தர் பாடல்கள் பெரும்பாலும் சிறுசிறு தொடர்களாக அமைந்துள்ளமையால் மக்கள் எளிமையாகப் உள்ளத்தில் பதிந்து விடுகின்றன. மக்கள் மனம் உருகி நெகிழுமாறு நயமுடையனவாகவும், பொருள் வளம் நிறைந்தனவாகவும், அமைந்துள்ளன. சித்தர் பாடல்களை மக்கள் பலரும் தெரு வழியே பாடிப்போகின்றனர்.

சித்தர் பாடல்கள் பெரும்பாலும் நாட்டுப்புறப் பாடல்களின் சாயல்களாகவே உள்ளன. வெண்பா, விருத்தம் போன்ற செய்யுள்களும், சிறுபான்மை இடம் பெற்றுள்ளன. கும்மி, தெம்மாங்கு, களிப்பு, இடையர் பாட்டு, வினா விடைப்பாட்டு, புலம்பல் போன்ற வாழ்வின் இயல்பை உணர்த்தும். “சிந்து, கும்மி கண்ணி முதலியன இவர்களது இலக்கிய வடிவங்கள்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

இவை பிற்காலத்தில் பள்ளு, குறவஞ்சி போன்ற இலக்கியங்களுக்கு ஆதாரமாயின. எனினும், பழைய இலக்கிய வடிவங்களையும் போற்றினர்"[11] என்பது குறிப்பிடத்தக்கது.

உருவகக் காட்சிகளையும் மனக்கண்ணில் தெளிவாக உணர்த்தும் வன்மை சித்தர்களுக்குண்டு. நாட்டுப்புறத்தாரிடையே சித்தர் பாடல்கள் பெரு விளக்கம் பெற்றதற்குக் காரணமாய் அமைவது இப்பாடல்களின் மொழி நடையேயாகும். பாமர மக்களுக்கும், மற்றவர்களுக்கும் பயன்படும் வகையில் இயற்ற விரும்பிய காரணத்தால் நாட்டுப்புறப் பாடல்களின் வடிவத்தைப் பயன்படுத்திக் கொண்டனர். உயர்ந்த இலக்கிய வடிவங்களைப் புரிந்துகொள்ள இயலாத பாமர்கள் இடையில் அவர்கள் புரிந்து கொள்ளும் சொற்களைப் பயன்படுத்தி தம் பாடல் வடிவங்களைச் சித்தர்கள் உருவாக்கினர்.

சித்தர்கள் தங்கள் பாடல்களில் இறைவனை, முன்னிலைப்படுத்தியே பாடியுள்ளனர். பெண், மக்கள், தான், மனம், மாணவன் ஆகியோரை முன்னிலைப்படுத்தியும் பாடியுள்ளனர். முன்னிலைப்படுத்திப் பாடுவதன் மூலம் மக்களை எளிதில் தம் வயப்படுத்த முடியும் என்ற சிந்தனை சித்தர்களை இவ்வாறு பாடச்செய்தது எனலாம். சித்தர் பாடல்களின் அமைப்பு உறங்கிக் கொண்டிருக்கும் மக்களைத் தட்டியெழுப்பும் வகையில் உணர்வு கொண்ட பாடல்களாக உள்ளன. கும்மிப் பாடல்களையும் இவர்கள் இலக்கியம் பேசுகிறது.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

சான்றாக,

“கற்புள்ள மாதர் குலம் வாழ்க நின்ற

கற்பை யளித்தவரே வாழ்க

சிற்பர னைப் போற்றிக் கும்மியடிகுரு

தற்பரனைப் போற்றிக் கும்மியடி"[12]

என்னும் பாடலைச் சுட்டலாம்.

இவ்வகை நாட்டுப்புறப் பாடல்களின் வழக்கு வன்மை கருதிய சித்தர்கள் இப்பாடல்களை, தங்களின் கொள்கை விளக்க வடிவங்களாகக் கொண்டு இசைப்பாடல்களாக ஆக்கியுள்ளனர். கீழ்நிலையில் வாழும் மக்களுக்கும், கல்வியறிவறியா மக்களுக்கும், பயனளிக்குமாறு பாடியுள்ளனர். இவ்வாறு சித்தர்கள் சமுதாயத்திற்குத் தங்களுடைய பாடல்கள் வாயிலாக பல்வேறு சிந்தனைக் கருவூலங்களை வழங்கிச் சென்றுள்ளனர்.

முடிவுரை

சித்தர் பாடல்கள் இலக்கிய அழகையும் சமூகத் தொண்டையும் ஒருங்கிணைத்த அரிய பண்புகளை உடையவையாக விளங்குகின்றன. பாமர மக்களுக்கும் எளிதில் புரியும் எளிய மொழி, நாட்டுப்புறப் பாடல் வடிவம், உவமை-உருவகங்களின் செறிவு ஆகியவற்றின் வழி, வாழ்க்கையின் நிலையாமை, ஒழுக்கம், ஆன்மிக உண்மை,

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

மனிதப் பிறப்பின் மகத்துவம் போன்ற ஆழ்ந்த கருத்துகளைச் சித்தர்கள் மக்கள் மனங்களில் பதிய வைத்துள்ளனர். மறைபொருள் கொண்ட சொற்களாலும் இரட்டைப் பொருள் அமைப்பாலும் சிந்தனைக்கு இடமளித்து, அறிய விரும்புவோருக்கு ஞான வழியையும் காட்டியுள்ளனர். சமூகச் சீர்திருத்தம், மனித நேயம், சமத்துவம், உண்மை நெறி ஆகியவற்றை வலியுறுத்தி, கல்வியறிவற்றவர்களையும் உள்ளடக்கி அனைவருக்கும் பயன் தரும் வகையில் இலக்கியத்தை மக்கள் நலக் கருவியாகச் சித்தர்கள் பயன்படுத்தியமை குறிப்பிடத்தக்கது. எனவே, சித்தர் பாடல்கள் தமிழிலக்கிய வரலாற்றில் மக்கள் இலக்கியமாகவும், சமூக விழிப்புணர்வை ஏற்படுத்திய சிந்தனைக் கருவூலமாகவும் என்றும் நிலைத்து நிற்கும் சிறப்புமிக்க படைப்புகளாகும்.

சான்றெண்விளக்கம்

1 பவானந்தம் பிள்ளை, பேரகத்தியத் திரட்டு, ப.37

2 சிவவாக்கியர், சித்தர் ஞானக்கோவை, பா.20.

3 கொங்கணர், சித்தர் ஞானக்கோவை, வாலைக் கும்பி, பா.28.

4 பட்டினந்தான், சித்தர் ஞானக்கோவை, தலப்பாடல், ப. 10

5. சி.கோ. தெய்வநாயகம், சித்தர் சிந்தனைகள், பா.71.

6. மேலது, .72

7. மேலது, பா.72

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

8. கடுவெளிச்சித்தர், பா.4

9. திருமூலர், திருமந்திரம், பா:3069.

10. பாம்பாட்டிச் சித்தர், சித்தர் ஒஞானக்கோவை, பா.66.

11. முனைவர் இளமதி ஜானகிராமன், சித்தர்களின் சிந்தனைகள், ப.82

12 கொங்கணர், சித்தர் ஞானக்கோவை, வாலைக்கும்மி, பா.எ. 46.

துணை நின்ற நூல்கள்

1.ராமநாதன், அரு., (ப.ஆ)
சித்தர் பெரிய ஞானக்கோவை, சி
த்தர் பாடல்கள்.
பிரேமா பிரசுரம் 28 ஆற்காடு சாலை.
சென்னை - 84. 1959

2. இளமதி ஜானகிராமன், க
சித்தர்களின் சிந்தனைகள்,
(தத்துவம் - இலக்கியம்).
குறிஞ்சி பதிப்பகம்
புதுச்சேரி.1991.

3. சரவணமுத்துப்பிள்ளை, (தொ.ஆ.) பதினெண் சித்தர்கள் பெரிய
ஞானக் கோவை.
இரத்தின நாயகர் அண்டு சன்ஸ்,
சென்னை 1971.